14991

# அருள்மிகு கற்பகநாதசுவாமி ஆலயம்

## கற்பகநாதர்குளம்

## (திருக்கடிக்குளம்)

## திருத்துறைப்பூண்டி வட்டம்



T14901
R005E02
T.14901

## வரலாறு

உ

சிவமயம்

# திருக்குடிக்குளம்

# தல வரலாறு

தொகுப்பு

பேராசிரியர் **சேக்கிழார்தாசன்** எம்.ஏ., பி.எட்.,

பதிப்பு

அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயில்

திருக்குடிக்குளம் (கற்பகநாதர் குளம்)

திருத்துறைப்பூண்டி வட்டம்

தஞ்சை மாவட்டம்

1983

முதற்பதிப்பு : ஆகஸ்டு-1983

விலை ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்)

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம். போன்: 27-A

# முன்னுரை

மனிதன் ஆறறிவு படைத்தவன். எது நன்மை, எது தீமை என்று அறியும் தன்மை கொண்டவன். இவ்வுலகில் மனிதன் மனிதனுக ஆவதற்கு அவன் மேற்கொண்ட முயற்சிகள் எண்ணில. அவற்றுள் அவன் இறைவன் உண்டு என உணர்ந்த தொன்றே அவனை மனிதனுக்கி-மேன்மையுறச் செய்ததோடு மனித இன வரலாற்றிலேயே மாண்புடையவாழ்வையும்அவன் துய்த்திடவழிகாட்டியது. சமய உணர்வு என்பது மனிதன் தன்னையும், உலகையும், இறைவனையும் உணரச் செய்யும் பெற்றியது. தன்னல மற்று வாழவும், தகைமைசான்ற செயல்களாற்றவும், உண்மையறிந்து இன்பம் துய்க்கவும் செய்வது சமயம். உண்மைச் சமயம் அதுவேயாகும். மனிதனை மன்னுயிர் மாட்டு இரக்கமும் அன்பும் கொண்டு அல்லல்களைந்து அரும்பசிபோக்கி ஆருயிர் அனைத்தையும் தன்னுயிர் போன்று பேணிக்காக்கும் பண்பட்ட வாழ்வை அளிப்பது சமயம்.சமயப் பயிற்சியுடையோர் இவ்வுலகைப் பேணும் புரவலர்கள் என்ருல் மிகையில்லை.

உலகில் தோன்றிய சமயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் தோற்றுவிக்கப்பட்டவை என வரலாறு காட்டிய போதிலும் நம் தொன்மையான சைவசமயம் அவ்வாறு ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது என இது காறும் எந்த அறிஞரும் காட்டமுடியவில்லை. அநாதியான நம் சைவசமயம் நம்மை அநாதையாக ஆக்கிவிடாமல் அந்தமில் இன்பத்து எந்தை சிவபெருமானுடன் என்றும் இன்ப அன்பில் திளைக்கவும் உயிர்கள் அனைத்துடனும் இயைந்து இணைந்து இன்புற்று வாழவும் வழிகாட்டுகின்ற தென்பதை நம் சமய சாத்திர தோத்திர நூல்களைப் பயின்ருல் இனிதுவிளங்கும். வாடியபயிரைக் கண்டால் வாடும் உள்ளங்கொண்ட ஞானியர் பலர் வாழ்ந்து காட்டிய நம்சைவ சமயத்திற்கு ஆணிவேராகத் திகழ்வது நம் திருக்கோயில்கள்.

திருக்கோயில்கள் ஆன்மீக வாழ்விற்கென அமைந்த கலங்கரை விளக்கங்கள். அவை நமது ஆன்மீக சக்தியை வளர்த்துக்கொள்ள அமைந்த சக்தி நிலையங்கள். பூமிக்குள் நீர் எங்கும் பரந்து காணப்படினும் ஒரு கிணறு அல்லது குழாய் மூலம் அதனை நாம் எடுத்துப் பயன் படுத்துவது போல, பசுவின் உடலில் பால் எங்கும் இருந்திடினும் முலைக் காம்பின் வழியே பெறுவது போல, இறைவன் எங்கும் நிறைந்து காணப்படினும் நம் ஆன்மீக வளர்ச்சிக்கும் மனப்பக்குவத்திற்கும்பயிற்சி செய்திட ஏதுவாக நம் தியானத்திற்கென ஒரு திருவுருவத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து திருக் கோயில்களில் வழிபட்டு உய்வடைகின்றோம். திருக்கோயில்களை மையமாக வைத்தே நம்முன்னோர் வளமான மன வளர்ச்சியும் பொருள் வளர்ச்சியும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திருக்கிறார்கள். கோயில்கள் குடிகளைத் தழுவியும் குடிகள் கோயில்களைத் தழுவியும் இகபர இன்ப வாழ்வினை எய்தி வந்துள்ளார்கள். சமுதாயத்தின் கேந்திரங்களாக கலை, இலக்கியம், கல்வி, மருத்துவம், இசை, என்று இன்னோரன்ன பல்வகைத்தான நாகரிகக் கூறுகளை கோயில்களைக் கொண்டே வளர்த்து அவற்றின் மூலம் நமக்கு வழி காட்டிச் சென்றுள்ளனர் நம் முன்னோர் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

திருக்கோயில் இல்லாத ஊரைத் திருவில்லாத ஊர் என்றே நம்முன்னோர் கருதினர். இக்காரணம் பற்றியே ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனவும், கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனவும், கோயில் விளங்க குடிவிளங்கும் எனவும் நம் ஆன்றோர் கூறிச் சென்றனர். தினமும் ஆலயம் சென்று வழிபட்டுமனமாசுகளைக்கழுவித் தூய்மை செய்யும் பயிற்சியை ஞானியரும் மேற்கொண்டிருந்தனர் எனின் நம்மனோர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது புலப்படும். ''மாலறநேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும் அரனெனக் தொழுமே'' என சிவஞான போதம் அறிவுறுத்துகின்றது.

வழிபாடு மனித வாழ்வில் நம்மை நல்வழிப் படுத்துவது. செம்பிற்களிம்பு போல நம்மனத்தில் மாசுக்கள், மலங்கள் உள்ளன. ஒவ்வொரு விநாடியும் நம் எண்ணம் தூய்மை கெடாமல் பாதுகாக்கவேண்டியுள்ளது அதற்கு ஒரு துணை நமக்குத்தேவை. அத்துணையும் மாசற்ற தாக இருத்தல் வேண்டும். ஆதலால்தான் திருவள்ளுவரும்

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

எனஅருளிச் செய்தார். தனக்குவமையில்லாதவன் தானே நமது மனக்கவலையைப் போக்க முடியும் இயன்ற போதெல்லாம் இறைவனைத் தரிசிக்கவேண்டும். இறைவனருள் பெற்ற சிவஞானியருடன் தொடர்பு கொள்ள வேண்டும்: அவர்தம் நூல்களைப் பயிலவேண்டும். பாடவேண்டும், பரவவேண்டும், பணிய வேண்டும், பண் பட்டு, பண்போடு வாழவேண்டும். இதுவே மனிதனாகப் பிறந்த பயனை நாம் எய்திடச் செய்வதாகும்.

சிவதரிசனம் மிகவும் உயர்ந்ததொன்று. நமது உடலுறுப்புகள் இறையருளைப்பெற உதவுவதற்காகவே பயன்படுத்தப் படவேண்டும் என்பார் திருநாவுக்கரசு சுவாமிகள் திருஅங்க மாலையில். இறைவன் கொடுத்த சொல் அவன் புகழ்பாட, இறைவன் அளிக்கும் கல்வியும் அவனுக்கு நாம் அர்ப்பணிக்க என்பார் அருணகிரிநாதர்:

**''யாமோதிய கல்வியும் எம்மறிவும்**
**தாமே பெற வேலவர் தந்ததனால்''**

உலகமே இறைவனது வடிவம்; உலகிற்குப் பயன்பட நாம் வாழும் போது இறைவன் நமக்களித்த ஆற்றல்களை நாம் உண்மையிலேயே இறைவனுக்கே அர்ப்பணிக்கின்றோம் என்ற உண்மை புலப்படும். மனம் விரிந்து எல்லா உயிர் களையும் இறைவனின் வடிவமாகப் பார்க்க பயிற்சி யளிக்கும் நிலையங்கள் நமது திருக்கோயில்கள்.

காலைதொழ அற்றைவினை கட்டகலும் - கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்-மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்.

என்று சிவதரிசன பலனை இப்பாடல் எடுத்தியம்புகின்றது

ஆலயங்களை நாம் பேணிக்காப்பதன் மூலம் நமது நாகரிகத்தைப் பேணிக்காக்கிறோம். நமது பண்பாட்டைப் போற்றுகிறோம். நமது சமுதாயத்தின் ஒற்றுமையை-வலிமையை-மேன்மையை உலகறிய விளக்கிநிற்கும் நமது திருக்கோயில்கள் உலகில் மனிதன் அடைந்துள்ள மிக உன்னதமான அறிவியற் சாதனையுமாகும். அவரவர்விழைவிற்கேற்ப அங்கே அமைந்துள்ள சிறப்புக்கள் அவரவர்களையும் ஈடுபடுத்துகின்றன. ஓவியம், சிற்பம், கட்டிடம் இசை கூத்து, வழிபாடு என ஏதோ ஒருகாரணம் குறித்துக் கோயில்களை நாம் சிந்தித்தபோதிலும் வழிபாட்டிற்காக ஆலயங்களைப் பயன்படுத்துதலே மிகச் சிறந்த பயனை விளைக்கும்.

நீரிற்குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திறைகள்-நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தா தெம்பிரான் மன்று?

என்று கேட்கிறார் குமரகுருபர சுவாமிகள். ஆலயங்களில் முறையாகப்பூசைகள் நிகழ்ந்தால்தான் நாடு நலம்பெறும் என்று திருமூலர் பேசுகின்றார். திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறல் வேண்டும் என்று வற்புறுத்துவார் திருஞான சம்பந்தசுவாமிகள். இங்ஙனம் திருக்கோயில்கள் நன்கு பயன்படுமாறு நம்வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இறையருளும் குருவருளும் நமக்குத் துணைசெய்ய வேண்டுவோமாக.

—சேக்கிழார்தாசன்.

# பதிப்புரை

திருக்கோயில்கள் நம் தமிழகத்தின் தொன்மைக்கும் பெருமைக்கும் சான்று பகர்வன. தமிழக மக்களின் சமுதாயவாழ்வில் சிறப்பிடம் பெற்று திகழ்கின்றன. தமிழ் நாகரிகம், பண்பாடு முதலியவற்றின் உறைவிடம் ஆலயங்களே ஆகும். தமிழ் மக்களின் வாழ்வும் வளமும்வரலாறும் பிறவும் ஆலயங்களுடன் பிரிவற பின்னிபிணைந்து இணைந்து காணப்படுகிறது.

தமிழகத்தின் இத்தகு சிறப்பு பெற்ற ஆலயங்களில் ஒன்று தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் கற்பகநாதர்குளம் (திருக் கடிக்குளம்) அருள்மிகு கற்பகநாதசுவாமி திருக் கோயிலாகும். திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற இத்தல சிறப்பை இந்நூல் வாயிலாக சற்றே கூற முனைந்தோம். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகட்கு பின் தற்போது தலவரலாற்று நூல் வெளி வரப்பெறுகிறது. இந்நூலை ஓர் தொடர்வு படுத்தி இவ் வரலாற்றுக்கு வடிவு கொடுத்த **பெரும் புலவர் சேக்கிழார் தாசன்** அவர்கட்கு என் நன்றி உரித்தாகுகிறது. இந்நூலை சிறப்புற அச்சிட்டு உதவிய வேதாரண்யம் **குருகுலம் அச்சகத்தாருக்கும்** நன்றி உரியதாகும்.

இவ்வாறுனதலவரலாறுவெளியிடப்பட்டு, சிறப்பறிய படவேண்டும் என முழுமனதுடன்ஈடுபட்டுநூல்வெளியிட காரணமாக இருந்தவர்களாகிய அறங்காவலர் குழு வினருக்கு என்றென்றும் கடமைபட்டுள்ளேன்.

N. **கலைமணி** B. A.
நிர்வாகஅதிகாரி

R **கோவிந்தராஜன்**
அறங்காவலர் குழு தலைவர்

K. **சந்திரசேகரன்**
G. **வைரக்கண்ணு**
V **கோபாலன்**
S. **ராஜரெத்தினம்**
அறங்காவலர்கள்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | இருப்பிடம் | ... | 1 |
| 2 | திருக்கோயில் அமைப்பு | ... | 3 |
| 3 | மூர்த்திச் சிறப்பு | ... | 4 |
| 4 | தலச் சிறப்பு | ... | 6 |
| 5 | தீர்த்தச் சிறப்பு | ... | 7 |
| 6 | தலவிருட்சம் | ... | 8 |
| 7 | வழிபட்டோர் | ... | 8 |
| 8 | வழிபாடுகள் | ... | 10 |
| 9 | பிறகோயில்கள் | ... | 12 |
| 10 | நிர்வாகம் | ... | 13 |
| 11 | முடிவுரை | ... | 14 |
| 12 | பிற்சேர்க்கை: | | |
| | திருக்கடிக்குளம் தேவாரப்பதிகம் உரையுடன் | ... | 17 |
| | பாராயணத் திரட்டு | ... | 23 |
| | கோதண்டராமசுவாமி பதிகம் | ... | 29 |

உ

சிவமயம்

# திருக்கடிக்குளம்

# தல வரலாறு.

## இருப்பிடம்.

எந்நாட்டினும் சிறந்தது நம் தென்னடான தமிழ்நாடு. தென்னடுடைய சிவன் எந்நாட்டிற்கும் இறைவன் என்பார் மணிவாசகர். தமிழ்நாட்டின் தனிச்சிறப்பாக விளங்குவது தஞ்சை மாவட்டம். நெஞ்சையள்ளும் நன்செய் நிலங்கள் மிகுந்து மனிதனின் உடற்பசியையும் உயிர்ப்பசியையும் போக்கக் கலைக்கருவூலங்களாகிய ஆன்மீக வளமிகுந்த ஆலயங்கள் பல தன்னகத்தே கொண்டது தஞ்சை மாவட்டம்.

தஞ்சை மாவட்டம் மலையே இல்லாதிருப்பினும் இங்குதான் கருங்கற் கோயில்கள் மிகுதியாக உள்ளன.


ஒவ்வொரு கோயிலும் பிரம்மாண்டமான கட்டிட அமைப்புடன் வரலாற்று, இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளுடன் திகழ்கின்றது. இம்மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ளது திருக்கடிக்குளம் என்னும் திருத்தலம். தேவாரம் பாடிய மூவரும் மிகுதியாகப் பாடிப் பரவிய தலங்கள் தஞ்சை மாவட்டத்திலேயே உள்ளன என்பதும் ஈண்டு நினைவு கூறத்தக்கது. திருக்கடிக்குளம் திருஞானசம்பந்தர் போற்றிப் பரவிய தலம் என்பதிலிருந்தே இத்தலத்தின் தொன்மையை இனிது உணரலாம். கி. பி 7-ம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பரவிய தலமெனில் அதற்கு நெடுங் காலம் முன்னரே இத்தலம் விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டது இத்திருக்கோயில் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

திருக்கடிக்குளம், கற்பகநாதர் குளம் எனவும் அழைக்கப் படுகிறது. திருத்துறைப்பூண்டியிலிருந்து 17. கி. மீ தொலைவில் தென்மேற்குத் திசையில் இத்தலம் உள்ளது. திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, வேதாரண்யம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி இத்தலத்திற்கு உள்ளது. முத்துப்பேட்டை -வேதாரண்யம் சாலையில் விளங்கும் திருக்கடிக்குளம் மிக அழகான திருக்கோயிலைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

சுற்றிலும் கற்பக விருட்சம் போன்ற தென்னை மரங்கள் சூழ்ந்து விளங்க இங்கே உயிருக்குக் கற்பகமாக விளங்கியருள்புரியும் அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயில் சிறப்புற விளங்குகின்றது. அமைதியான அழகான சிற்றூராகத் திகழும் திருக்கடிக்குளத்தில் நாம் வேண்டியவற்றை வேண்டியாங்கு அளித்தருளக் கற்பகநாதராகச் சிவபெருமான் திருக்கோயில் கொண்டு திகழ்கின்றார்.

## திருக்கோயில் அமைப்பு

பொதுவாக ஊர் என்றால் அங்கே ஒரு கோயில் இருக்கும் ஆனால் ஊரின் பெயரே கோயிலின் பெயராக



அருள்மிகு கற்பகநாதர் சன்னிதி

விளங்கும் சிறப்பும் நம் தமிழகத்திலே உண்டு. சிதம்பரம் வைதீசுவரன்கோயில், திருவரங்கம், திருஆனைக்கா என

வருவன போன்று இத்தலத்திலும் கோயிலே ஊராகவும், ஊரே கோயிலாகவும் திகழ்வது தனிச்சிறப்பாகும். கற்பகநாதர்குளம் என்றே இவ்வூர் அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் மூன்று கோயில்கள் முக்கியமானவை. அவை கற்பக விநாயகர், கற்பகநாதர், கோதண்டராமர் கோயில்கள் ஆகும். ஏறத்தாழ 11. 52 ஏக்கர் பரப்பில் இத்திருக் கோயில்கள் பரந்து காணப்படுகின்றன. கோயிலின் வடபால் திருக்குளம் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய கற்பகநாதர் கோயிலில் இறைவி அருள்மிகு பாலசவுந்தரி அம்பாள் தெற்கு நோக்கி விளங்குகிருள். கோயிலின் திருமாளிகை பத்தியில் நால்வர், சோமாஸ் கந்தர், முருகன், திருமகள் சந்நிதிகள் திகழ்கின்றன. கற்பகநாதர் கோயிலுக்குத் தென்மேற்குப் பகுதியில் கற்பகவிநாயகர் கோயிலும், கற்பகநாதர் கோயிலுக்குத் தெற்கில் கோதண்டராமர் திருக்கோயிலும் விளங்கு கின்றன. 5—5—1890ல் ஒரு தோப்பில் கண்டெடுக்கப் பெற்ற இராமர், இலக்குமணர், சீதாதேவி, அநுமார் திருமங்கையாழ்வார் திருவுருவங்கள் அங்கேயே காணப் பெற்ற திருக்கோயில் அஸ்திவாரத்தின் மீது அழகான ஆலயம் எழுப்பப்பெற்று இன்று சிறப்பாகத் திகழ்கின்றன திருமங்கையாழ்வார் திருவுருவத்தைப் பார்க்கும்போது இத்தலம் திருமங்கையாழ்வாரால் போற்றப் பெற்றிருத் தல் வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது.

## மூர்த்திச் சிறப்பு

இத்தலத்து மூலத்தான இறைவர் திருநாமம் கற்பகநாதர் அல்லது கற்பகேசுவரர் என வழங்கப்படு கிறது. இப்பெருமான் சிவலிங்க வடிவில் எட்டுப்பட்டை கொண்ட அமைப்பில் விளங்குகிருர். இவ்வடிவ அமைப்பு வேறு எத்தலத்தும் இல்லை என்பர். கற்பகவிருட்சம் எட்டுக்கிளைகளையுடையது என்ற காரணம் பற்றியே அத்தருவின் பெயர் பூண்ட இப்பெருமானும் எட்டுப் பட்டை வடிவமாக அமைப்பு கொண்டார் போலும்

ஒருகாலத்தில் கார்த்திகார்ச்சுனன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான். அவன் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டான். அவன் கோரிய வரங்கள்பலவும்அவனுக்குப் பெருமான் தந்தருளவே, கற்பகலிங்கம் என்ற பெயரால் பிரதிட்டை செய்து திருக்கோயிலும் அமைத்துப் பரவினன் என்று தலமான்மியம் பேசும். பதங்க முனிவர் வழிபட்டு வசித்த திருவிடம் ஆகும் இது. தேவதருவாகிய கற்பகம் கேட்டவர்க்குக் கேட்டதை எல்லாம் கொடுக்கும் திறம் வாய்ந்தது. அதனைப்படைத்த பெருமானாகிய நம் சிவபெருமான் கற்பகநாதராக இத்திருக்கோயிலில் எழுந்தருளித் தம்மை வழிபடுவோர்க்கு இம்மை மறுமை இன்பங்களை வழங்கி அருளுவதில் வியப்பேது!

இத்தலத்தில் அம்பிகை அருள்மிகு சவுந்தரநாயகி அல்லது பாலசவுந்தரி என்று போற்றப்படுகிறாள். சுந்தரி யாகிய அந்தரி அம்பிகை அழகெல்லாம் ஒருருக்கொண்டு இங்கே எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். இவ்வம்மை யைக் காணும்போது.

சுந்தரி எந்தை துணைவி என்பாசத்தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

என்ற அபிராமி அந்தாதிப் பாடல் நம் நினைவுக்குவர, நாமும் அதனைப்பாடிப் பரவுகின்றோம். கற்பகத்தைச் சுற்றியுள்ள காமவல்லிபோன்று சிவபெருமானிடத்தே பிரியாது விளங்கும் உமாதேவியார் இங்கே சவுந்தரநாயகி யாகத்திகழ்வது மற்றொரு சிறப்பாகும்.

கோபுரவாயிலில் விநாயகர், முருகன் உள்ளனர். மூன்று நிலைகளுடன் இராஜகோபுரம் கம்பீரமாக விளங்கு கின்றது. மேற்குத் திருமாளிகை பத்தியில் சைவசமயா சாரியர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்,

சுந்தரமூர்த்தி நாயனூர், மாணிக்கவாசகர் என்னும் நாற்பெரும் சமயகுரவர்களும் எழுந்தருளி சைவசமய நன்னெறியில் நாம் வாழவேண்டும் என நினைவூட்டு கின்றனர். அடுத்து இஷ்டசித்தி விநாயகர், முருகன், கஜலெட்சுமி சந்நிதிகள் அமைந்துள்ளன. கிழக்குத்திரு மாளிகை பத்தியில் நவக்கிரகங்கள், சனிபகவான், பைரவர் சந்நிதிகள் விளங்குகின்றன. சூரியன், சந்திரன் திருவுருவங்கள் மரபுப்படி அமைந்துள்ளன.

இத் தலத்திற்குப் பெருமை சேர்க்கும் சிறப்பு அம்சமாகக் கற்பக விநாயகர் தனிக்கோயில் கொண்டு விளங்குகிறார். கற்பகமாகிய சிவபெருமானளித்த கனி பெற்றுண்டுகளிக்கும் இக்கற்பகக் களிற்றின் திருக்கோயில் கற்பகநாதர் கோயிலின் தென் மேற்குப் பாரிசத்தில் திகழ்கின்றது. சிவபெருமானிடம் மாங்கனி பெற்ற விஞயகர் இங்குள்ள விநாயகப் பெருமானே என்பது ஐதீகம்.

## தலச்சிறப்பு

ஒருபொருளின் சிறப்பு அது அமைந்துள்ள இடத்தினு லேயே மிகுகின்றது. இரத்தின மாயினும் அதுபொன்னுல் இழைக்கப்படும்போது அது அதிக அழகுபெற்று விளங்கு கின்றது. இத்தலமும் தன் இடஅமைப்பாலும், வழி பட்டுய்ந்த ஆன்றோர்களாலும் தனிப்பெருமை கொண்டு திகழ்கின்றது கார்த்திகார்ச்சுனன் வழிபட்டு வரமெலாம் பெற்றுய்ந்த இத்தலத்தை அகத்தியர் வழிபட்டதாகத் தலமான்மியம் கூறும். இத்தலத்தைச் சுற்றிபல சிவதலங் கள் உள்ளன. அவற்றுள்ளும் இடும்பாவனம் திரு உசாத் தானம் (கோயிலூர்) தில்லைவிளாகம், திருமறைக்காடு (வேதாரணியம்) போன்றன குறிப்பிடத்தக்கனவாம்.

இத்தலத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் மற்ருெரு அம்சம் இங்கே விளங்கும் கோதண்டராமசுவாமி திருக்

கோயிலாகும். இராவணனை வதைசெய்ய விரும்பிய இராமபிரான் அதற்குரிய மந்திரசக்தியை அடையும் பொருட்டு ஆதிசேது என்று போற்றப்பெறும் திருமறைக் காட்டிலிருந்து திருஉசாத்தானம் என்னும் திருக் கோயிலூரின் கண் எழுந்தருளியுள்ள மந்திரபுரீசுவர சுவாமியிடம் சென்றார். அங்ஙனம் செல்லும்போது இடை யில் வழிபட்டுச் சென்ற தலங்களுள் ஒன்றாக திருக்கடிக் குளம் உள்ளது. இதனை நினைவுறுத்துவதாக இத்தலத்தில் அருள்மிகு கோதண்டராம சுவாமி தம்பி இலக்குவன், தேவி சீதையுடன் அநுமன்சூழ அருள்சுரக்கும் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ளார். நமது சமயத்தின் இரு கண்களாகத் திகழும் சைவமும் வைணவமும் சிறப்புறத் திகழும் இத்தலத்தின் மாண்பினை என்னென்பது!

இத்தலத்திற்குரிய மற்றொருசிறப்பு இத்தலத்தைப் பாடிப்பரவிப் போற்றிய திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தைப் பற்றிக் கூறியுள்ள சில சொற்றொடர் களாகும், திருஞானசம்பந்தர் இங்கே வழிபட்டமை குறித்து அடுத்துவரும் பகுதியில் அவற்றை விரிவாகக் காண்போம். இதுபோன்றே கோதண்டராமர் சந்நிதியில் விளங்கும் திருமங்கை மன்னன் திருவுருவமும் நமக்குத் திவ்வியப் பிரபந்த மாண்பினை நினைவூட்டுகின்றது.

## தீர்த்தச்சிறப்பு

திருக்கடிக்குளம் என்ற பெயரைக் காணும்போதே இத்தலத்தின் புண்ணியப்புனலின் மாண்பினை இனிது உணரலாம். கடி என்றால் மணம் என்று பொருள். மண மிக்க திருக்குளம். ஆம்! சிவமணம் கமழ்வது; பலநீர்மலர் களின் மணம் கமழ்வது; திருக்கோயிலின் வடபால் விளங் கும் இத்திருக்குளத்தை விநாயகதீர்த்தம் என்று போற்று வர். சிவபெருமான் உணர்த்தியருளிய வண்ணம் ஒரு மகான் தன் தந்தையின் அஸ்தியை கரைத்திட பல இடங் கள் அலைந்து இத்திருவிடம் வந்தடைய திருக்கடி என்ற

மாட்டு குழம்பு அடிவைத்த பள்ளத்தில் நீர்கண்டு, அஸ்தியை இடஅலை தாமரையாக மலர்ந்து கடி கமழ அதனுலேயே திருக்கடிக்குளம் என பெயர் பெற்றது. நாடோறும் இச்செந்தாமரை மலர்கள் கற்பகநாரின் செந்தாமரைப் பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கப் படுகின்றன. விநாயகர் திருப்பெயரையும் சுரும்பு ஓதும் செந்தாமரைப் பெரும் போதுகளேயும் தாங்கி, கற்பகநாதர் அடித்தலத்தே அமைந்து விளங்கும் இத் தண்ணிய புண்ணியப் புனலில் படிவோர் அனேத்து மாசுகளும் நீங்கி அரனருளால் இன்புறுகிறுர்கள்.

## தலவிருட்சம்

ஒவ்வொரு சிவாலயத்துக்கும் ஒரு தெய்வமரம் உள்ளது. அதனேத் தலவிருட்சம் என்பர். அவ்வகையில் நம் கற்பகநாதர் திருக்கோயிலின் தலவிருட்சம் பலா மரம் ஆகும். பாலசவுந்தரி அம்பிகையின் சந்நிதிக்கு மேற்புறம் இம்மரம் உள்ளது. இது பல்லாண்டுகளாக இருந்து வருகிறது என்பர்.

## இத்தலத்தில் வழிபட்டோர்

இத்தலமான்மியப்படி விநாயகர் சிவபெருமானே வலம்வந்து மாங்கனி பெற்றது இத்தலமே எனவும் ஆகவே தான் இங்கே விநாயகருக்கு மாங்கனி விநாயகர் என்ற பெயரும், தீர்த்தத்துக்கு விநாயகதீர்த்தம்என்றபெயரும், வந்தது என்பர். கார்த்திகார்ச்சுனன் இங்கே வழிபட்டு வரங்களேப் பெற்றுன் என முன்னரே காட்டினேம். அகத்தியர் இங்கே வழிபட்டு அருள்பெற்றுர்.

திருஞான சம்பந்தர் இங்கே வந்து வழிபட்டுப் பதிகம் பாடி அருள் பெற்றுர். திருஞானசம்பந்தர் இத்தலத்தில்

வழிபட்டதைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு காட்டுகின்றார்:

கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்த
கடிக்குளம் இறைஞ்சி
எண்ணார்ந்த திருஇடும்பாவனம்
ஏத்தி எழுந்தருளி
மண்ணார்ந்த பதிபிறவும் மகிழ்தரும்
அன்பால் வணங்கி
பண்ணார்ந்த தமிழ்பாடிப்
பரவியே செல்கின்றார்

(திருஞானசம்பந்தர் புராணம்: 623)

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிலிருந்து புறப்பட்டு பாண்டி நாட்டில் சிவப்பயிரை மூடியிருந்த சமண் களையைக் களையும் பொருட்டுச் செல்கையில் திரு அகத்தியான்பள்ளி, கோடிக்குழகர்கோயில்களைப் பணிந்து இத்தலத்தின் வழியே வருகிறார். இத்தலச் சூழல் எங்கும் சிவலிங்கமாகவே விளங்குவதைக் கண்டு பரவசம் எய்துகிறார். இயற்கைச் சூழலில் விளங்கும் இத்தலத்தைப் போற்றுகிறார். கடிக்குளத்தமர்ந்த கற்பகநாதரை இசைத்தமிழால் எடுத்துப் பாடிப் பரவுகின்றார், நாம் செய்த நல்வினைப் பயனால் திருஞானசம்பந்தர் இத்தலத்தில் பாடிய பதிகம் முழுதுமாகக் கிடைத்துள்ளது. இப்பதிகம் இத்தலப் பெருமையை நமக்கு இனிதே காட்டுகின்றது.

''கடிகொள் பூம்பொழில் சூழ்தருகடிக்குளம்''
''கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளம்''
''கரும்புகார்மலி கொடிமிடைக் கடிக்குளம்''
''கனமலி கடலோதம் வந்துலாவியகடிக்குளம்''

என வரும் சொற்றொடர்கள் இத்தலத்து இயற்கை அனப்பினையும் அமைப்பையும் எடுத்துக்காட்டுவன. கற்பக

நாதரைப் பணிந்தால் பாசம் நீங்கும். கடிக்குள வள்ளலாரைக் கண்டு உருகிப் பாடினுல் கேடுநீங்கும், பழிசாராது, புகழ்மிகும். கற்பகநாதரை நினைந்து ஏத்திப் பரவினுல் துன்பங்கள் தொடரா. கடிக்குள நாதரை வழிபட்டு அர்ச்சிப்பவர் நற்றவம் உடையவர். கடிக்குள நாதரை கைகூப்பித் தொழுதால் வினைவிட்டகலும். கடிக்குளத்து இறைவன் முன்நின்று துதித்தால் வினைகள் நில்லா. குணமுடையோர் கடிக்குளக் கூத்தனையே ஏத்திப்பணிவர். கடிக்குளத்திறைவன் கழல்பணிந்தால் தீவினைகள் கழலும். கடிக்குளநாதரின் அடியார்களைப் பணிந்தாலே நல்வழி எளிதில் நண்ணும். கடிக்குளப் பெருமானைத் திருஞானசம்பந்தர் சொற்படி துதிப்பவர் மறுமையில் கயிலைநாதனேடு கலந்து வாழ்வர் என்றிவ்வாறு திருஞானசம்பந்தர் இத்தலப் பதிகத்தில் நமக்குக் கடிக்குளநாதரின் கழலடிகளைப் பணிய ஆற்றுப் படுத்துகிருர். திருஞானசம்பந்தரின் திருவாக்கினை உணர்ந்து வழிபட, அப்பதிகம் இந்நூலின் பிற்சேர்க்கையில் கருத்துரையோடு இணைக்கப் பெற்றுள்ளது. அன்பர்கள் பயின்று நலம்பல பெறுவாராக.

## வழிபாடுகள்

இத்திருக் கோயிலில் நாடோறும் நான்கு கால வழிபாடுகள் நிகழ்கின்றன. உலகம் வாழவேண்டும் என்பது தான் நம் திருக்கோயில் பூசையின் அடிப்படைத்தத்துவம் அது பரார்த்த பூசை என்றழைக்கப்படும். திருக்கோயிலில் பூசைகள் தட்டின்றி சிறப்பாக நடைபெற்ருல் தான்நாடு செழிக்கும், மனிதகுலம் சிறந்து வாழும் என்பார் திருமூலர். திருக்கோயில் மாண்பும் அதனை முறைப்படி பேணிலால் கிட்டும் பேறுகளும், அதனை முறைப்படி பேணுவிடில் விளையும் கேடுகளும் பற்றித் திருமூலர் கூறுவது நாம் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டும். திருமூலர் பாடல்களைச் சற்றுச்சிந்திப்போம்.

தாவரலிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. 515

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே. 516

ஆற்றரும் நோய் மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே 517

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள மாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. 518

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. 519

திருமந்திர நூலில் காணப்பெறும் இந்த ஐந்து திருப்பாடல்களையும் இன்றைய சமுதாயம் நன்குணர்ந்து பயின்று சமய நெறியில் நின்றால் இக்காலத்தில் காணப்பெறும் பல இன்னல்கள் நீங்கும் என்பது தெளிவு. நமக்கெல்லாம் அத்தகைய நல்லுணர்வினைத் தந்தருளுமாறு நாதன் கழலடிகளை நாளும் பணிவோமாக.

தினந்தோறும் ஐந்துகால வழிபாடுகள் நிகழ்வதுநித்தியம் எனப்படும். சிறப்பு வழிபாடுகள் நைமித்திகம் எனப்படும். இத்திருக் கோயிலில் ஆனித்திருமஞ்சனம், ஆடிச்சுக்கிர வாரம், நவராத்திரி, திருக்கார்த்திகை, கார்த்திகைச் சோமவாரம், திருவாதிரை, தைப்பூசம், தைச்சுக்கிர வாரம், அன்னுபிஷேகம், மகாசங்கராந்தி, சிவராத்திரி, வருடப்பிறப்பு முதலிய விசேடகால உபயங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

## பிறகோயில்கள்

அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயிலின் தென்பால் அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில் விளங்குவதை முன்னரே குறிப்பிட்டோம்.

திருக்கடிக்குளத்துக்குக் கிழக்கே 2 கி. மீ தொலேவில் துளசியாபட்டினம் என்ற ஊர் உள்ளது. இங்கே ஔவையாருக்குக் கோயில் உள்ளது. தஞ்சையை ஆண்ட துளஜாஜி மன்னரால் அமைக்கப்பெற்ற இக்கோயில் வரலாற்றுப் புகழ்மிக்கது. கொல்லன் திடல் என்ற ஊரில் ஔவையார் தங்கியிருந்தபோது வெள்ளம் அவ்வூரைச் சூழ்ந்து கொண்டது; அங்கிருந்த கொல்லன் ஔவையாரை வேறுஇடம் நாடிச் செல்லுமாறு வேண்டினுன்; ஔவையார் இறைவனேக் குறித்துப்பாட, வெள்ளம் வளவனுற்றின் மூலம்வடிந்தது என்று கூறுவர். துளசியா பட்டினத்தில் தான் முருகன் சிறுவனுய் வந்து சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று கேட்டு ஔவையாருக்கு அருள்புரிந்ததாகவும் கூறுவர். துளஜாஜி மன்னர் காசி சென்று வழிபட்டு அங்கிருந்து கொணர்ந்த விசுவநாதரைப் பிரதிட்டைசெய்து மகப்பேறு பெற்ருர். தமிழ் மூதாட்டி ஔவையாருக்கும் அங்கே கோயில் அமைத்தார் என்று வரலாறு காட்டுகின்றது, ஔவையார் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனிச் சதயநாளில் ஔவையார் விழா சமய விழாவாகவும், இலக்கிய விழா

வாகவும் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழகத்திலேயே ஔவைக்கு என்று இங்கு மட்டுமே கோயில் உள்ளது. கற்பகநாதர் ஆலய நிர்வாகத்தின் கீழ் இவ்வாலயம் உள்ளது.

திருக்கடிக்குளத்தில் பல கிராம தேவதைகளின் திருக்கோயில்கள் உள்ளன. மாரியம்மன், பிடாரியம்மன், பிச்சை கொண்ட ஐயனர் கரையங்காட்டுக் காளிகா தேவி, பாலடிகாத்தான் ஆதிசங்கரரால் உபதேசிக்கப் பெற்ற வழிவந்த காசி அரண்மனை இளவரசர்கள் எழுந்தருளி உள்ள நல்ல மாணிக்கர் ஆலயம் ஆகியவை உள்ளன.

## நிர்வாகம்

இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு அறநிலையத் துறையினரால் நிர்வகிக்கப்படுகிறது இத்திருக்கோயிலில் விரைவில் திருப்பணிகள் நிறைவேறி குடமுழுக்குப் பெருவிழாக் காணவும் திருக்கோயில் பொலிவுடன் நித்திய நைமித்திக விழாக்களுடன் திகழவும் சைவப் பெருமக்கள் அனைவரும் திருக்கோயிலுக்கு நாளும் வந்து வழிபட்டு, உடனிருந்து ஒல்லும் வகையால் உதவிகளெல்லாம் வழங்கி உய்வடைய வேண்டும்.

இத்திருக்கோயிலுக்குத் தில்லைவிளாகம், தரகு சிங்களாந்தி, பாலக்குறிச்சி, பள்ளங்கோயில், கீழத் தொண்டியக்காடு, விளாங்காடு, சேகல் முதலிய கிராமங்களிலும் உள்ளூரிலும் ஏறத்தாழ 746.89 ஏக்கர் நிலங்கள் உள்ளன. திருத்துறைப்பூண்டி வட்டத்தில் கரையங்காடு என்ற கிராமத்தையே இத்திருக் கோயிலுக்குத் தஞ்சைமன்னர் அளித்துள்ளார் என்று சாசனம் பேசும்.

## முடிவுரை

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச் சிறப்புகளும் கொண்டு, வரலாற்றுத் தொன்மையும், ஆன்மீகவளமும் கொண்டு பலநூற்றுண்டுகளாக மக்களுக்கு மகேசன் அருள்கிட்டுமாறு பணிபல ஆற்றி வரும் இத்திருக்கோயிலை சைவர்களாகப் பிறந்த ஒவ் வொருவரும் வழிபட்டுப் பேறு பெறவேண்டும். வழி படுவோர் வசதிக்காகப் பலவிடுதிகள் கட்டுமாறு வழி படுவோர் எண்ணிக்கை மிக வேண்டும்.

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

# பிற்சேர்க்கை

1 திருஞானசம்பந்தர் அருளிய
திருக்கடிக்குளப் பதிகம்

2 பாராயணத் திரட்டு

3 திருக்கடிக்குளம் கோதண்டராம
சுவாமி பதிகம்

சிவமயம்

# திருக்கடிக்குளத் திருப்பதிகம்

(திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியது)

பண்—நட்டராகம் (2ஆம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொடிகொண் மேனிவெண் ணூலினர் தோலினர்
புலியுரி யதளாடை
கொடிகொ ளேற்றினர் மணிகிணி னெனவரு
குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே. 1

(இதன் பொருள்) திருநீறு பூசிய மேனியரும், வெண்ணூல் பூண்டவரும் புலித்தோலணிந்தவரும் விடைக் கொடியை உடையவரும் காலிற்கட்டிய மணிகள் கிணின் கிணின் என்று ஒலிக்கவும் சிலம்புகழல் ஆர்க்கவும் வருப வருமாகிய பொழில் சூழ்ந்த கடிக்குளத்துறையும் கற்பக நாதரைத் தம்முடி வீழ்ந்து அடிபணியும் அடியவரைப் பழவினைகள் சூழ்ந்து வருத்தமாட்டா.

விண்களார் தொழும் விளக்கினைத் துளக்கிலர்
விகிர்தனை விழவாரும்
மண்களார் துதித் தன்பரா யின்புறும்
வள்ளலை மருவித்தம்
கண்களார்தரக் கண்டுநங் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தைப்
பண்களார்தரப் பாடுவார் கேடிலர்
பழியிலர் புகழாமே. 2

(இ—ள்) விண்ணோர் தொழும் ஒளிவடிவினரும், தளர்ச்சியில்லாதவரும், வேறுபட்ட செயல்களை உடைய வரும், மண்ணுலகிலுள்ளோர் விழா எடுத்துத்துதித்து அன்பராய் வழிபடின் அவர்க்கு அருளும் வள்ளலுமாகிய கடிக்குளத்தில் விளங்கும் கற்பகநாதரை நெருங்கிச்

சென்று கண்ணுரைக் கண்டு பண்ணுரைப்பாடும் **அடியவர்** கேடிலர், பழியிலர், பெரும்புகழடைவர்.

பொங்கு நற்கரி புரியது போர்ப்பது
புலியதள் அழல்நாகம்
தங்க மங்கையைப் பாகம துடையவர்
தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தை
எங்கு மேத்திநின் றின்புறும் அடியரை
இடும்பை வந்தடையாவே. 3

(இ—ள்) சினத்தொடு வந்தெதிர்த்த **யானையை** உரித்து அதன் தோலைப் போர்த்தும், புலியின் தோலை உடுத்தும், கொடிய நாகத்தைப் பூண்டும், பார்வதி தேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவரும், **தழல்** போலும் சிவந்த திருமேனியரும் கங்கை பொங்கும் **சடை** முடியினரும் திருக்கடிக்குளத்தில் விளங்குபவருமாகிய கற்பகநாதரை எவ்விடத்திலிருந்தும் ஏத்தித் **துதித்து** இன்புறும் அடியவர்களைத் துன்பங்கள் அடையா.

நீர் கொள் நீள்சடை முடியனை நித்திலத்
தொத்தினை நிகரில்லாப்
பார்கொள் பாரிடத் தவர்தொழும் பவளத்தைப்
பசும்பொனை விசும்பாரும்
கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங் கற் பகந்தன்னைச்
சீர்கொள் செல்வங்கள் ஏத்தவல் லார்வினை
தேய்வது திணமாமே. 4

(இ—ள்) கங்கையைத் தரித்த நீண்ட சடைமுடிய னும், முத்துக்களின் கொத்தாக விளங்குவோனும், **உலகி** லுள்ளோர் பவளம், பொன்போன்றுபோற்றிக்**கொள்ளத்** தக்கவனும் ஆகிய வானளாவிய பொழில் சூழ்ந்த **திருக்** கடிக்குளத்துறையும் கற்பகநாதரைக் கண்டு **அவரது**

சீரார்ந்த செல்வங்களையெல்லாம் ஏத்துவார் வினை தேய்வது திண்ணம்.

சுரும்பு சேர்சடை முடியினன் மதியொடு
துன்னிய தழல்நாகம்
அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன மலர்பல
கொண்டடியவர் போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளத்
துறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையோ டுளமகிழ்ந் துரைப்பவர்
விதியுடை யவர்தாமே. 5

(இ—ள்) கரும்புகளும் கொடிகளும் பின்னி வளர்ந்த வளமுடைய கடிக்குளத்தில் வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய சடைமுடியினனும் சந்திரன், நாகம் ஆகியவற்றை அணிந்தவனும் ஆகிய கற்பகநாதரை அரும்புகளும் தாதவிழ்ந்த மலர்களையும் கொண்டு மிக்க வேட்கையோடு மனமகிழ்ந்து புகழும் அடியார்கள் நற்கதி உடையவராவர்.

மாதி லங்கிய பாகத்தன் மதியமொ
டலைபுனல் அழல்நாகம்
போதி லங்கிய கொன்றையு மத்தமும்
புரிசடைக் கழகாகக்
காதி லங்கிய குழையினன் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தின்
பாதங் கைதொழு தேத்தவல் லார்வினை
பற்றறக் கெடுமன்றே. 6

(இ—ள்) மாதொரு பாகத்தனும், பிறை, கங்கை பாம்பு, கொன்றை, ஊமத்தை ஆகியவற்றைச் சடையில் அணிந்தவனும், காதில் குழை அணிந்தவனும் ஆகிய திருக்கடிக்குளத்தில் விளங்கும் கற்பகநாதரின் திருவடிகளைக் கைதொழுது ஏத்தவல்லார் வினை பற்றறக் கெடும்.

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்
குழாம்பல குளிர் பொய்கை
புலவு புள்ளின மன்னங்க ளாலிடும்
பூவைசே ருங்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத்
துறையுங்கற் பகத்தைச்சீர்
நிலவி நின்றுநின் றேத்துவார் மேல்வினை
நிற்ககில் லாதானே. 7

(இ-ள்) அழகிய கொடிகள் கட்டிய மாடங்களையும், மகளிர் குழாம் நீராடும் குளிர் பொய்கைகளையும், புலால் உண்ணும் புள்ளினம் அன்னங்கள் ஆகியவற்றின் ஒலிகளையும் கொண்ட திருக்கடிக்குளத்தில் எழுந்தருளி உமையம்மையை வாமபாகத்தே கொண்டு தலைமாலை சூடி விளங்கும் கற்பகநாதரின் புகழை ஏத்துவார் பால் வினைகள் ஒரு போதும் நிற்கமாட்டா.

மடுத்த வாளரக் கன்னவன் மலைதன்மேல்
மதியிலா மையிலோடி
எடுத்த லும்முடி தோள்கரம் நெரிந்திற
இறையவன் விரலூன்றக்
கடுத்து வாயொடு கையெடுத் தலறிடக்
கடிக்குளந் தனின்மேவிக்
கொடுத்த பேரருட் கூத்தனை யேத்துவார்
குணமுடை யவர்தாமே. 8

(இ-ள்) பகைவர் உடலில் புகுத்தும் வாளையுடைய அரக்கனாகிய இராவணன் அறியாமையால் கயிலைமலையை எடுத்தபோது அவனது முடிகளும் கைகளும் நெரியக் கால் விரலால் ஊன்றி, அவன் கையெடுத்துத் துன்புற்று வாயால் அலறிய போது பேரருள் கொடுத்த திருக்கடிக் குளத்து இறைவனை ஏத்துவார் இறைவனது எண்குணம் பெறுவர்.

நீரினுர் கடற் றுயின்றவன் அயனெடு
　　நிகழடி முடிகாணுர்
பாரி னுர்விசும் புறப்பரந் தெழுந்ததோர்
　　பவளத்தின் படியாகிக்
காரினுர்பொழில் சூழ்தரு கடிக்குளத்
　　துறையுங்கற் பகத்தின்றன்
சீரி னுர்கழ லேத்தவல் லார்களைத்
　　தீவினை யடையாவே. 9

(இ-ள்) பாற்கடலில் யோகநித்திரை புரியும் திருமாலும், நான்முகனும் அடிமுடிகாண முற்பட்ட போது பாதாளம் முதல் விசும்புவரை பவளச் சோதி வடிவாக நின்றவனும் கரியபொழில் சூழ்ந்த திருக்கடிக் குளத்தில்விளங்கு வோனுமாகிய கற்பகநாதனின் திருவடி களை ஏத்த வல்லவர்களைத் தீவினைகள் ஒருபோதும் அடையமாட்டா.

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணருங்
　　குறியினின் நெறிநில்லா
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக்
　　கொள்ளன்மின் விடமுண்ட
கண்டர் முண்டநன் மேனியர் கடிக்குளத்
　　துறைதரும் எம்மீசர்
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்
　　தூநெறி எளிதாமே. 10

(இ-ள்) குண்டர்களாகிய சமணரும், பெளத்தரும் குறிக்கோளோடு கூடிய நெறி நில்லாதவர்கள். அவர்கள் மெய்யுரை போலக் கூறுவனவற்றை மெய்யெனக் கொள்ளாதீர்கள். விடமுண்ட கண்டரும், திருநீறு அணிந்தவரும் ஆகிய திருக்கடிக்குளத்துறையும் ஈசராகிய கற்பகநாதரது தொண்டர்கட்குத் தொண்டராயினுரைப் பணியுங்கள்- சிவநெறி எளிதிற் கைகூடும்.

தனமலி புகழ் தயங்குபூந் தராயவர்
மன்னன் நற் சம்பந்தன்
மனமலிபுகழ் வண்டமிழ் மாலைகள்
மாலதாய் மகிழ்வோடும்
கனமலி கடலோ தம்வந்துலவிய
கடிக்குளத் தமர்வானை
இனமலிந்திசை பாடவல்லார்கள் போய்
இறைவனோ டுறைவாரே. 11

(இ-ள்) செல்வமும் மிக்க புகழும் உடைய பூந்தராய் என்னும் சீகாழிப்பதி மன்னராகிய திருஞானசம்பந்தர் மனம் நிறைந்த மகிழ்வோடு அருளிய புகழ்மாலையாகிய இத்திருப்பதிகத்தை அன்புசெய்து மகிழ்வோடு ஓதி மேகம் தங்கும் கடல்ஓதம் வந்துலவும் திருக்கடிக்குளத்து இறைவரைப் பணிந்து அடியவர் கூட்டத்தோடு இசை கூட்டிப்பாடுவார் மேலுலகிற் சென்று இறைவனோடு கலந்து இன்புற்றிருப்பர்.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# பாராயணத் திரட்டு

## விநாயகர்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தானை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## முருகன்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

## திருநந்திதேவர்

அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு நாதர்க்கெல்லாம் முதற்குரு நாதனுகிப்
பங்கயத்துளவ நாறும்வேத்திரப் படைபொறுத்த
செங்கணெம் பெருமான் நந்திசீரடிக் கமலம்போற்றி

## நால்வர் துதி

பூழியர் கோன்வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

## அறுபத்து மூவர் துதி

தத்து மூதெயில் மூன்றும் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணைசேர்அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்

## சேக்கிழார் துதி

தூக்குசீர் திருத்தொண்டத் தொகைவிரி
வாக்கினுற் சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனுப்பதி குன்றைவாழ்
சேக்கிழானடி சென்னி இருத்துவாம்

## சிவபெருமான் துதி

தேவாரம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என்பிழை, பொறுப்பானை
பிழையெலாம் தவிரப் பணிப்பானை

இன்னதன்மையன் என்றறியொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

## திருவாசகம்

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தால்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

சிவனோ டொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோ டொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

## பதினோராம் திருமுறை

பொய்யா நரகம் புகினும்துழக்கினும் போந்துபுக்கிங்
குய்யா உடம்பினோ டூர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமறவா வரம் வேண்டுவனே

## பனிரெண்டாம் திருமுறை (பெரியபராணம்)

உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றியபொருளுமாப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## தட்சிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கம்முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த காரணமாய் மறைக்கப் பாலாய்

எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்நினைந்து
பவத்தொடக்கை வெல்வாம்.

## முருகவேள்

இரவுபகல் பலகாலும்
இயலிசை முத்தமிழ் கூறித்
திரமதனைத் தெளிவாகத்
திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே
பரசிவதத் துவஞானு
அரனருள்சற் புதல்வோனே
அருணகிரிப் பெருமானே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

நாளென்செயும் வினைதான் என்செயும் எனைநாடிவந்த
கோள் என்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும்சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே.

ஆறிருடந்தோள்வாழ்க அறுமுகம்வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெல்லாம்.

## திருமகள் துதி

பொன்மா மகளாய்ப் பூவின்மகளாய்
நன்மா கடலீந் திடவந் தவளே
பன்மா மணிசேர் பவளத் திரளாய்
என்பா லுறவந் தினிதாண்டருளே.

## சௌந்தரநாயகி துதி

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி யுடையாள் சரணம் அரண்நமக்கே.

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்லஅவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

மழை வழங்குக மன்னவன் ஓங்குக
பிழையில்பல் வளங்களும் பெருகுக
தழைக ஐந்தெழுத்தோசை இத்தரையெல்லாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

ஸ்ரீ,

ஸ்ரீ ராமஜெயம்

# திருக்கடிகுளம் ஸ்ரீ கோதண்டராம சுவாமிபதிகம்

[கடலூர் வித்வான் தே. ஆ. சீநிவாஸாசாரியார் இயற்றியது]

உலகங்கள் அத்தனையும் ஒடுக்கி உந்தி
உயர்ந்தசீர் வைகுந்தம் உறைவா ளுகிக்
கலகஞ்செய் அசுரர்தமைக் கட்டழிக்கக்
கடல்மீனுய்க் கமடமதாய்க் கோலம் சிங்கம்
இலகுஞ்சொற் குறள்மூவர் இராம ராகி
எழிற்கண்ணன் கல்கியுமாய் ஆவான் கோயில்
நிலமெங்கும் நிழல்செய்யுங் கற்பகஞ்சார்
நீள்பொழில்சேர் கடிக்குளமாம் நிகரில் லூரே 1

பாராண்ட மன்னன்மனக் கவலை தீர்க்கப்
பாரியைகள் மூவரிடை நால்வர் ஆகிச்
சீராண்ட முனியோடே சிக்கல்லாண்டு
சிவனுண்ட சிலையாண்டு சீதைகொண்டு
நேராண்ட மழுவாளன் தவமுங் கொண்டு
நிகரிலயோத் திக்குவந்த நிமலன் கோயில்
பேராண்ட தலம்பலசூழ்ந் தெங்கும் தெங்கம்
பெரும்பொழில் சேர்கடிக்குளமாம்
பெருமா னூரே 2

தன்னப்பன் பெரியரொடும் ஆழ்ந்து சூழ்ந்து
தன்னரசைத் தனக்களிக்க வுன்னுங் காலை
முன்னப்பன் ஈந்தவரத் தாற்சிற் றன்னை
முட்செறிகான் ஈரேழாண் டேகச் சொல்ல
மின்னுப்பொற் கொடியோடும் தம்பி யோடும்
மிகவுமகிழ்ந் தரண்சென்றான் மேவுங் கோயில்
தென்னைப்பற் பாளையவிழ் தேறல் மாந்தித்
தேனுலுங் கடிக்குளமாம் தெய்வத் தூரே 3

வனஞ்சென்று குகனுதவி கொண்டு கங்கை
வகையாகத் தாண்டிபல முனிவ ரீண்டக்
கனங்கொண்ட குறுமுனிவன் படைகள் கொண்டு
காருறையு மால்வரையென் சித்ர கூடம்
இனங்கொண்ட பரதனுக்கும் பாதுசங்கள்
இன்புறவே நல்கிவிட்ட எழிலோன் கோயில்
கனங்கொண்ட நீராட்டக் கடலங் கோதக்
கதிர்காட்டும் கடிக்குளமாம் கவினு ரூரே. 4

கானேகிச் சூர்ப்பணகை கருவம் நீக்கிக்
கருவியெழும் அரக்கர்தமைப் பொருதுமாய்த்து
மானேவக் கொன்றுமனை யிழந்த ழந்து
மலங்கிமிகக் கலங்கிப்புள் ளேற்றி வீடு
வானேறு மரங்களே முரந்தொளைத்து
வானரங்க ளரசழித்த வலவன் கோயில்
கூனேறு குலச்சங்கங் குளிறக் கொண்டல்
குளிர்செய்நற் கடிக்குளமாம் கோமானூரே. 5

இரவிமகன் அரசாக்கி அனுமன்தன்பால்
இலங்குகணை யாழியளித் திலங்கை போக்கி
விரவியசேல் விழியாளைக் கண்டிலங்கை
வீயத்தீ யாற்சுட்டு விரும்பி மீண்டு

பரவியசொற் கேட்டுவந்து குரக்கி னத்தின்
படைசூழக் கடல்சென்ற பரமன் கோயில்
பரவையொலி விரவுமொலி பறவை கேட்டுப்
பலதிசைசெல் கடிக்குளமாம் பான்மையூரே. 6

வானவர்கள் துயரகன்று வாழ்வு மேவ
வந்தடைந்த வீடணற்கு மகுடஞ் சூட்டித்
தானவர்கள் வாழிலங்கைக் கோனை மாளத்
தடங்கலை யணைசெய்து கடந்து சென்று
வானவர்கள் புடைசூழ வல்வில் தாங்கி
வள்வாளி கோத்திட்ட வள்ளல் கோயில்
கானமறை முறையோதக் கிள்ளை சொல்லும்
கற்பகமார் கடிக்குளமாம் கஞ்சத்தூரே. 7

கட்டழகி சீதையினைக் காவல் வைத்துக்
கடுந்துன்பம் விளைத்திட்ட கடியன் தன்னைப்
பட்டழிய விட்டம்பைப் பகைவன் சேனை
படரடையத் திடர்செய்து படுத்தி வீழ்த்துக்
கெட்டொழியச் செய்திட்டுச் சீதை மீட்ட
கேடிலவர் நீடிநிதம் உறையுங் கோயில்
மட்டவிழச் சுரும்போதும் மணங்கொள் சோலை
மரையார்ந்த கடிக்குளமாம் மதிளா ரூரே. 8

அரக்கர்குலம் வேரறுத்திட் டன்பு பூண்ட
அம்புயத்தாள் சீதையொடு மீண்ட யோத்தி
இரக்கமுடைப் பரதன்முத லோர்கள் சூழ
இன்பாரும் வசிட்டர்மணி மகுடஞ் சூட்ட

அரக்கர்புரி யரந்தையிரு ளகல வோட்டும்
ஆதித்தன் கோதண்ட ராமன் கோயில்
பரக்குமிகு பக்தியுடைத் திருமங்கை மன்
பரவுதிருக் கடிக்குளமாம் பண்பா ரூரே. 9

மணிமுத்தந் தருகற்ப கத்தோ டென்றும்
மன்னுகடிக் குளத்துநகர் நாளும் மேவித்
திணிபத்தி யநுமனுர் திருமங் கைமன்
தினம்பணியத் திருமகளார் சீதை தன்னே
டணிபத்தி கொண்டஇலக் குமணன் தன்னே
டமர்ந்துமகிழ் கோதண்ட ராமர்ப் போற்றும்
பணிமெத்தக் கொண்டவர்கள் பரந்தா மத்திற்
பரந்தாமனேடுறையும் பதங்கொள் வாரே.10

முற்றும்